மெக்சிகோவின் நெருப்பு மலை

தமிழில்: அருண்குமார் ஆண்டவன்
தாமஸ் பி லிவிஸ்
படம் :ஜோன் சாண்டின்



மெக்சிகோவின் நெருப்பு மலை



தமிழில்: அருண்குமார் ஆண்டவன்

தாமஸ் பி லிவிஸ்

படம் : ஜோன் சாண்டின்




ஒருகாலத்தில் மெக்சிகோவில் ஒரு விவசாயி வாழ்ந்து வந்தார். அவர் ஓர் சிறிய கிராமத்தில், ஒரே அறை கொண்ட இல்லத்தில் வசித்து வந்தார்.



அந்த விவசாயி மகிழ்ச்சியற்றவராக இருந்தார். “எப்போதும் ஒன்றும் நடப்பதில்லை” என அவர் சொல்லிக்கொண்டிருந்தார்.

கிராமத்தில் உள்ள மக்கள் அவரை முட்டாள் என நினைத்தனர். “நமக்குத் தேவையான அனைத்தும் நம்மிடமுள்ளன” என்று அவர்கள் கூறினர்.



“நம்மிடம் பள்ளி மற்றும் சந்தை,

மேலும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஒலிக்கக்கூடிய பழைய மணியுடன் கூடிய ஒரு தேவாலயம் உள்ளன. இங்குள்ளவற்றில் நமது கிராமமே சிறந்ததாக உள்ளது”.


“ஆனாலும் எப்போதும் ஒன்றும் நடப்பதில்லை” என விவசாயி கூறினார்.




ஒவ்வொரு காலையும் விவசாயி கண்விழிக்கும்போது, அவர் பார்க்கும் முதல் விஷயம், அவரது சிறிய இல்லத்தின் கூரையையே. ஒவ்வொரு நாளும் அவரது காலையுணவாக மக்காசைசோளத்தால் செய்யப்பட்ட தட்டையான கேக்குகளே அவர் உண்கிறார். அவரது மனைவி முந்தையநாள் இரவே அவற்றை தயார்செய்துவிடுவாள். அவர் அதன் மீது தேனைத் தடவி வைத்துவிட்டு, மண்கோப்பையில் இலவங்கத்தேனீரை அருந்துவார். இருந்தும் “ஒருபோதும் ஒன்றும் நடக்கப்பதில்லை” என்று சொல்வார்.



இருள் இன்னும் விலகாதபோதும், விவசாயி வயல்வெளிக்குச் செல்ல தயாராகிவிட்டார். அவரது மகன் பாப்லோ இன்னும் உறங்கிக்கொண்டிருந்தான். “ஒருவேளை இன்று ஏதாவது நடக்கலாம்” என்றாள் அவரது மனைவி. ‘இல்லை’,”ஒன்றும் நடக்காது” என்றார் அந்த விவசாயி. விவசாயி அவரது காளையை முன்செலுத்தி, திரும்பிப் பார்க்காமல் சென்றார்.



இரவு நேரத்தில் விவசாயி வீடு திரும்பினார். அவரது காளைக்கு உணவு வழங்கினார். பிறகு அவர் நெருப்புக்கு அருகில் அமர்ந்தார். பாப்லோ மிருதுவான ஐந்து கற்களைக் கொண்டு விளையாடினான், தரையில் அவன் தோண்டிய பள்ளத்தில் அக்கற்களை எறிந்து விளையாடினான். ‘அப்பா பாருங்களை’ என்றான் பாப்லோ, ஒரு கல் சரியாக குழியில் விழுந்துவிட்டது.




ஆனால், விவசாயி சோர்வாக இருந்தார். அவர் அவனுக்கு பதிலளிக்கவில்லை, எல்லா தினங்களும் ஒன்றுபோலவே இருந்தன.

ஒரு காலைப்பொழுதில், விவசாயி வெகு முன்னதாகவே விழித்துக்கொண்டார். அவரது கம்பளிச்சட்டையை இழுத்து அணிந்து கொண்டார். சுவற்றில் உள்ள கொக்கியில் இருந்து அவரது தொப்பியை எடுத்துக்கொண்டார். “நான் சீக்கிரமாகவே வயல்வெளிக்குச் செல்லவேண்டும்” என்று அவர் சொன்னார். “உழுதல் இன்னும் செய்யப்படாமல் உள்ளது, சோளம் விதைப்பதற்கான பருவம் விரைவில் வரவுள்ளது.”



ஒவ்வொரு நாள் காலையிலும் விவசாயி அவரது வயல்வெளியில் வேலை செய்தார். காளை அவருக்கு உதவியாக இருந்தது.



உழும் பாதையில் பூமிக்கு அடியில் பெரிய பாறை தடுக்கியவுடன், காளை சட்டென்று நின்று, கீழே அமர்ந்துவிட்டது. விவசாயி அந்தப் பாறையை உந்தித் தள்ளினார். காளையை “ட்ஸ்ட்,ட்ஸட்” என்று அதட்டினார். காளை விவசாயியை திரும்பிப் பார்த்தது, பிறகு எழுந்து, மீண்டும் இழுக்க ஆரம்பித்தது.

பின்காலைப் பொழுதில்,
சூரியன் உச்சியில்
இருக்கும் பொழுது,
பாப்லோ வயல்வெளிக்கு
வந்தான்.



"பாப்லோ”, விவசாயி அழைத்தார்.
“ஏன் பள்ளிக்குச் செல்லவில்லை?”

“ இன்று பள்ளிக்கு விடுமுறை, அப்பா,” என்றான் பாப்லோ.

“ உழவில் உங்களுக்கு உதவ வந்திருக்கிறேன்”.

விவசாயி புன்முறுவல் செய்தார். அவர் தனது சட்டைப்பையில் கையை விட்டு, மரத்தாலான பொம்மையை எடுத்து அச்சிறுவனிடம் கொடுத்தான். ‘காளை’ என்று கூவினான் பாப்லோ. விவசாயி அதிக வெயிற்ப்பொழுதில், வேலையிலிருந்து ஓய்வெடுக்கும் நேரத்தில் தனது மகனுக்காக அப்பொம்மையைச் செய்திருந்தான்.



பாப்லோ, உழுவதற்கு விவசாயிக்கு உதவினான்.

காளை ஏர்கலப்பையை இழுத்தது, கலப்பை மண்ணைக் கிளரிவிட்டது, சட்டென்று கலப்பை நின்றது. விவசாயியும் அவரது மகனும் தள்ளினர், காளை இழுத்தது, இருந்தும் கலப்பை அசையவில்லை. அது பூமிக்கடியில் புதைந்துவிட்டது, அது கீழே சென்றுவிட்டது,

இன்னும் கீழே,

இன்னும் கீழே,

ஒரு சிறு துளைக்குள் சிக்கிக்கொண்டது.



சிறிய துளை, பெரிதாக மாறிவிட்டது. பூமியின் வெகு ஆழத்தில் ஏதோ ஒன்று உறுமவது போல சத்தம் கேட்டது.

.

விவசாயி பார்தார்,

பாப்லோ பார்தான்,

காளை அதன் தலையைத் திருப்பிப் பார்த்தது.

நிலத்தில் உள்ள துளையிலிருந்த புகை வெளி வந்தது.



" ஓடு !" விவசாயி.
கத்தினார் .

“ஓடு !”

அங்கு பலமான சத்தத்துடன் விரிசல் ஏற்பட்டது மற்றும் பூமி அகல திறந்தது.

விவசாயி ஓடினார்,

பாப்லோ ஓடினார்,

மற்றும் காளையும் ஓடியது.

பூமியிலிருந்து தீ மற்றும் புகை எழுந்து வந்தது.



விவசாயி
கிராமத்திற்கு
செல்லும் வழி
நெடுக ஓடினார்.
அவர்
தேவாலயத்தினுள்
நுழைந்து,
புராதானமான
மணியை ஓங்கி
அடித்தார்.



மற்ற விவசாயிகள் அவர்களது நிலத்தில் இருந்து வெளிவந்தனர்.

மக்கள் அவர்களது இல்லத்திலிருந்து வெளிவந்தனர்.

‘பாருங்கள்!’ என்றார் விவசாயி.

‘அங்கு பாருங்கள்!’.



அன்றைய இரவு ஒருவரும் உறங்கவில்லை, அனைவரும் வானில் தெரிந்த தீயைப் பார்த்துக்கொண்டிருந்தனர்.




அது, விவசாயியின் வயல்வெளி இருக்கும் இடத்தில் இருந்து வந்தது.



அங்கு ஓங்கிய
வெடிப்புச்சத்தம் ஒன்று
எழுந்தது,

இன்னொன்று,

மற்றும் இன்னொன்று..



கொதிக்கும் லாவா(நெருப்புக் குழம்பு) பூமியிலிருந்து வெளிவந்தது. சூடான லாவா மரங்களின் ஊடாக நிலத்தின்மேல் பரவியது. அது விவசாயியின் வீட்டை நோக்கி வந்தது. அது கிராமத்தை நோக்கி வந்தது. எறியும் கற்துகள்கள் காற்றில் சிதறின.

பூமி இருமிக்கொண்டிருந்தது, ஒவ்வொரு முறை இருமும்போதும் நெருப்பு மலை வளர்ந்துகொண்டே சென்றது.



சில நாட்களில் குன்றானது மலையளவு பெரிதானது, மேலும் சில நிமிடங்களுக்கு ஒருமுறை பலத்த வெடிப்பு சத்தம் எழுந்தது. அணில்கள் மற்றும் முயல்கள் ஓடின, பறவைகள் நெருப்பிடமிருந்து விலகிப் பறந்தன. மக்கள் தங்களது பொதி கழுதைகள் மற்றும் காளைகளை பாதுகாப்பாக ஓட்டிச்சென்றனர்.


எரியும் சாம்பல் துகள்கள் சுற்றிலும் பறந்தன. விவசாயியும், அவரது அண்டை மக்களும் புகையைத் தவிர்க்க ஈரமான துண்டை மூக்கின் மேல் கட்டிக்கொண்டனர்.



சிலர் கொதிக்கும் லாவாவிற்கு மிக அருகில் சிலுவையை ஏந்திச் சென்றனர்.



நெருப்பு அணைய அவர்கள் வேண்டிக்கொண்டனர். விவசாயியும், பாப்லோவும் குன்றுக்கு பக்கமாக நின்று அதைப் பார்த்தனர்.



வெடிப்பு நிற்கத்தொடங்கியதும், நெருப்பு சிறிது சிறிதாக அணைத்தொடங்கியது.

விவசாயியின் வீடு அழிந்துவிட்டது.

பள்ளி அழிந்துவிட்டது.

சந்தை அழிந்துவிட்டது.

பாதிக் கிராமமே அழிந்துவிட்டது.



ஒருநாள் சீருடை அணிந்த சில நபர்கள் ஜீப்பிலும், காரிலும் வந்தனர்.

“ஆக, நீதானே பூமியைப் பிளந்த கலப்பையை வைத்திருப்பவன்”. என்று அவர் விவசாயியிடம் கேட்டுச் சிரித்தார்கள்.

“உயிர் பிழைத்த நீ பெரிய அதிர்ஷ்டசாலி, நண்பனே.”



பாதுகாப்புப் படையினர் கிராமத்தைப் பார்வையிட்டனர்.”எல்லோரும் வெளியேறுங்கள்,” என்று கட்டளையிட்டார் படைத்தளபதி.

“இனிமேலும் இங்கு வாழ்வது பாதுகாப்பில்லை.”. விவசாயி,அவரது மனைவி,பாப்லோ மற்றும் கிராமத்தின் அனைத்து மக்களும் பாதுகாப்புப் படையினருடன் லாரியில் சென்றனர்.







விவசாயி புதிய வீட்டைக் கட்டினார். அது முன்பு இருந்த வீட்டைவிட பெரிதாக இருந்தது.

புதிய வீடு, பழைய வீட்டிற்கு வெகு தொலைவில் இல்லை. ஆனால் அது “அசுரன்” என்று பொருள்படும் *எல் மான்ஸ்ட்ருயோ* விடம் இருந்து போதுமானளவு தள்ளியே இருந்தது. இது அந்த பிரம்மாண்டமான எரிமலைக்கு மக்களால் அளிக்கப்பட்ட பெயர்.


மக்கள் புதிய கிராமத்தை உருவாக்கினார்கள், அவர்கள் புதிய பள்ளிக்கூடம் மற்றும் புதிய சந்தையையும் உருவாக்கினார்கள்.



மக்கள் ஓர் பெரிய திருவிழாவை ஏற்பாடு செய்தனர், ஏனெனில் அவர்கள் இப்போது பாதுகாப்பாக உள்ளனர். திருவிழாவில் வாத்தியக்குழு இசைக்க, மக்கள் நடனமாடினர் மற்றும் அவர்கள் தங்கள் கரங்களை தட்டி மகிழ்ந்தனர்.







நகரத்தில் உள்ள மக்கள் *எல் மான்ட்ஸ்ட்ருயோ* என்று அழைக்கப்படும் ராட்சத எரிமலையைக் காண பேருந்தில் வரத்துவங்கினர்.

கிராம மக்கள் அவர்களிடம் ஆரஞ்சுப்பழம், முலாம்பழம், ஊன்றொட்டிகள் மற்றும் சோளத்தில் செய்த கேக்குகள் போன்ற தின்பண்டங்களை விற்றனர்.

இப்போது விவசாயியிடம் புதிய வயல்வெளி உள்ளது. ஒவ்வொரு நாளும் அவர் சீக்கிரமாகவே எழுந்துகொள்கிறார், இருள் இன்னும் விலகாமலேயே உள்ளது, *எல் மான்ஸ்ட்ருயோ* வானில் பிரகாசமாக உள்ளது. ஒவ்வொரு நாளும் காலை உணவாக அவர் சோளக் கேக்குகளை உண்கிறார். அவரது மனைவி அவற்றை முந்தைய நாள் இரவே தயார்செய்து வைத்துவிடுகிறார்.

விவசாயி அவரது புதிய வயல்வெளிக்குச் செல்கிறார். முன்புபோலவே அவரது காளையும் அவருடன் செல்கிறது.





சில சமயங்களில் பாப்லோ, விவசாயியைக் காண கிராமத்தில் உள்ள சிறுவர்களுடன் வருவான். அந்த வயலில் இருந்து,ஒரு முதியவர் புகைப்பிடிப்பது போலத் தோன்றும் புகையும் எரிமலையை அவர்களால் பார்க்க முடியும்.

“உங்களால் இன்னொரு நெருப்பு மலையை உருவாக்க முடியுமா” என்று சிறுவர்கள் கேட்டனர்.



“முடியாது, எனது நண்பர்களே, முடியாது , முடியாது.” என்று விவசாயி சிரித்துக்கொண்டே சொன்னார்.

“ஒரு நெருப்புக் குன்றே எனக்கு போதும்.” என்றார் சிரித்துக்கொண்டே.

ஆசிரியரின் குறிப்பு

இக்கதையானது, பிப்ரவரி 20,1943 அன்று பரிகுட்டின் என்ற எரிமலை வெடிப்பைக் குறித்த செய்தியை அடிப்படையாகக் கொண்டது. அது மெக்சிகோவின் மிகோகேன் மாநிலத்தில் இந்தியப் பெயரில் டியோனிஸ்ஸியோ புலியோ என்ற டரஸ்கன் பகுதியில் அமைந்த சோளக்காட்டிற்குள் வெடித்தது. இந்நிகழ்வில் எந்த உயிரிழப்பும் ஏற்படவில்லை, ஆனால் இரண்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் தங்கள் வாழ்விடங்களை இழந்தனர். இதற்குமுன் வரலாற்றில் ஒரேயொரு முறை மட்டுமே எரிமலை கண்திறப்பதை மனிதர்கள் கண்களால் பார்த்துள்ளனர். அது கேனரி தீவில் உள்ள டெனிரைப்-ல் உள்ளது. மக்கள் இப்பொழுது பரிகுட்டினை பார்வையிட முடியும், அவர்கள் எரிமலையையும், சாம்பல்களாலும், லாவாக்களாலும் பல அடிகளுக்குக் கீழ் இறுகி புதைந்து போன கைவிடப்பட்ட அந்த கிராமத்தையும் பார்க்க முடியும்.

எல்லா நாளும்
பாப்லோவின்
அப்பாவிற்கு ஒன்று
போலவே இருந்தது.
ஒருநாள் நண்பகல்
பூமியானது உறுமி, சீறி
புகையெழுப்பி பின்னர்
விவசாயியின்
கலப்பையை
விழுங்கியது.
எரிமலையானது
அவனது
சோளக்காட்டிற்கு
மத்தியல் இருந்து
வெளிவந்தது.